மாக இருப்பது மக்கள் பிரச்னைதான், மக்கள் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக போக்குவரத்தும் அதிகமாகியிருக்கிறது, அதற்குத் தகுந்த முறையில் அரசாங்கம் அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

(ஆ) சர்க்கரை ஆலைகளில் சீனி மூட்டைகள் தேங்கியிருப்பதால் விவசாயிகளுக்குப் பணம் கிடைக்காமை.

திரு. ஆர். கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"தமிழ்நாட்டிலுள்ள எல்லா சர்க்கரை ஆலைகளிலும் சீனி மூட்டைகள் தேக்கமான நிலையில் உள்ளதால் விவசாயிகட்கு உரிய காலத்தில் பணம் கிடைக்கவில்லை".

THE HON. THIRU P. U. SHANMUGAM: Mr. Speaker, Sir, According to the conditions laid down in the Sugar Cane Control Order, 1966, the Sugar factories have to make payment of cane prices to the ryots within 14 days from the date of delivery of cane to the Mills. Sugar factories have some difficulties in making prompt payment to the ryots because of the locking up of capital in the accumulated stocks of sugar. There are certain other reasons also for the non-payment of cane price, viz;—

(1) The ryots who spplied cane might not have contacted the respective mills for the payment of dues in time.

(2) The ryots might have received loan assistance from the respective mills whose accounts have to be settled before the final payment.

2. The Director of Agriculture has already taken steps to contact the factory authorities personally to clear off the arrears early. The field staff of the Agriculture Department are also contacting the cane growers and advising them to get the cane price due to them from the Mills.

3. To reduce the burden of the sugar mills caused by the heavy accumulation of sugar stocks, the Government are considering the question of addressing the Government of India to create a buffer stock of sugar, and to bear the interest and godown charges on such stocks held as buffer. Relief has also been given by the decision of the State Government to permit the sugar mills themselves to sell the levy quota alotted to the Mills to avoid lapsing of the quota owing to poor offtake through the Government distribution system. The State Government have also recently moved the Government of India to give a trial to full decontrol reserving powers to take over up to 50 per cent of the total production through Government channels, if necessary.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, பல தொழிற்சாலைகளிலே கரும்பு வெட்டியதற்கு 10 ரூபாய் அட்வான்ஸாகக் கொடுத்தார்கள். வெட்டுக்கூலி, வண்டிவாடகைப் பணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதுபோன்ற சிக்கல்கள் அடுத்த ஆண்டிலேகூட வரலாம், எனவே இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே. விவசாய இயக்குநர் ஆலைச் சொந்தக்காரர்களோடு பேசி விரைவிலே கரும்பு உற்பத்தியாளர்களுக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்.

பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 173 (4)வது விதியின் கீழ் 1970–71 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவில் திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்களின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 3—9—1970 வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 3—9—1970 வியாழக்கிழமை மாலை 3 மணிக்குப் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 5—9—1970 சனிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.